# கிறிஸ்துவின் வசனம்
## (WORD OF CHRIST)

ஆசிரியர்:
சகோ. அர்ச்சுனன், II கொரி 3.6.

கொலோ 3:16
ஆகஸ்ட் 1992

வாசகர்களுக்கு,

நம்முடைய பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்கு கிருபையும் சமாதானமும் உண்டாவதாக!

இவ்விதழ் மூலம் உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். இந்த முதலாவது இதழை வெளியிடச் செய்த தேவனுக்கு ஸ்தோத்திரத்தையும், உற்சாகப் படுத்திய ஒவ்வொருவருக்கும் என் நன்றியையும் தெரியப்படுத்திக் கொள்கின்றேன். இதை வாசிக்கும் அன்புசகோதரனே! சகோதரியே! ஒரு உண்மையான புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை அமைக்க வேண்டும் அநேகர் இவ்விதழ் மூலம் புதிய உடன்படிக்கையின் சத்தியங்களை (எபி 8 : 13) தெரிந்துகொள்ள வேண்டும். தேவன் தம்முடைய சுய இரத்தத்தினாலே சம்பாதித்துக் கொண்ட அவருடைய சபையாகிய (அப் 20:28, மத் 16:18, ரோம16:16) கிறிஸ்துவின் சபையை உருவாக வேண்டுமென்பதே எனது அவா! மேலும் இவ்விதழை குறித்த கருத்துகளையும், ஆலோசனைகளையும் வரவேற்கிறேன்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபை நம்மனைவரோடும் கூட இருப்பதாக! ஆமென்!

ஆசிரியர்

# நித்திய ஜீவன்
## (ET~~H~~ERNAL LIFE)

RA5

என் அன்பு சகோதரனே! சகோதரியே! நிலையில்லா வாழ்க்கை வாழ்ந்து வரும் நம் நித்திய வாழ்க்கையை குறித்து சற்று சிந்தித்து பார்ப்போம் இவ்வுலகத்தில்யாரால் நமக்கு நித்திய வாழ்க்கைகொடுக்க முடியும்? அவரவர் அவருடைய ஆத்துமாவையே காத்துக்கொள்ள முடியவில்லையே. அப்படியிருக்கும் போது யார் நமக்கு நித்திய வாழ்க்கையை கொடுக்கமுடியும். பரிசுத்த வேதாகமத்தில் யோவான் எழுதின சுவிசேஷத்தில் 6:68-ம் வசனத்தில் சீமோன் பேதுரு

ஆண்டவரே யாரிடத்தில் போவோம் நித்திய ஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே என்று கூறுவதைப் பார்க்கிறோம். அந்த ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவிடம் சென்றால் நித்தியஜீவ வசனம் உண்டு. அதை நாம் பெற்று நித்திய வழியாகிய சத்திய வழியில் சென்று நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ள முடியும்.

மத்தேயு எழுதின சுவிசேஷம் 19:16 17-ல் ஒருவன் வந்து ஆண்டவரை நோக்கி நல்லபோதகரே நித்திய ஜீவனை அடைவதற்கு நான் எந்த நன்மையைச் செய்யவேண்டும் என்று கேட்டான் அதற்கு அவர் நீ ஜீவனில் பிரவேசிக்க விரும்பினால் கற்பனைகளைக் கைக்கொள் என்றார். இதை வாசிக்கும் பிரியமான தேவபிள்ளையே நீயும் ஜீவனில் பிரவேசிக்க விரும்பினால் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் பரிசுத்தமான ஆவிக்குறிய கற்பனைகளைக் கைக்கொள் அப்பொழுது நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

முற்பிதாக்களின் காலத்தில் பார்க்கும் போது யோவான் எழுதிய சுவிசேஷத்தில்3:14-16ல் சொல்லப்பட்டது போல வெண்கல சர்ப்பத்தை நோக்கிப் பார்த்தவன் பிழைத்தான். அதைப் போன்று மனுஷகுமாரனும் சிலுவையில் நமக்காக பாடுகள்பட்டு இரத்தம் சிந்தினார். அவரை நோக்கிப் பார்த்து விசுவாசித்து தன் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ளுகிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்வான் எனக்கு அருமையான கர்த்தருடைய பிள்ளைகளே இயேசுவிடம் ஜீவ வசனத்தைப் பெற்றுக் கொள்ள ஆயத்தமா!. அவருடைய கற்பனைகளை கைக்கொள்ள ஆயத்தமா! அவருடைய சிலுவை பாடுகளைப் பார்த்து, விசுவாசித்து கீழ்படிய ஆயத்தமா! ஆகவே நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ள இன்றே தீர்மானம் செய்யுங்கள், கர்த்தர் உங்களோடிருந்து உங்களை வழிநடத்துவராக! ஆமென்.

## சபை செய்திகள்:

O ஞாயிற்றுக்கிழமை 8-30 மணிக்கு துவங்கும் ஆராதனையும் சனிக்கிழமை மாலை 5-30 மணிக்கு துவங்கும் சிறுவர்களுக்கான வேத வகுப்பும் நல்ல முறையில் நடைபெற்றது.

O கர்த்தருக்கும் சித்தமானால் இம்மாதக் கடைசி வாரத்தில் 28-ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 5-00 மணிக்கு சுவிசேஷக்கூட்டம் நடைபெறும் தவறாது கலந்து கொண்டு பயன் பெறுங்கள்.

## ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள்

யாக் 5 : 16

★ சகோ. **சிதம்பரம்** அவர்களுக்கு தலையில் அடிபட்டு தற்போது சுகமாகிக் கொண்டு வருகிறார். பூரண சுகம் கிடைக்க

★ சகோ. **குணசுராஜ்** இல்லம் கட்டி முடிக்க.

★ சகோ. **மகாலிங்கம்** இரும்பு தொழிற்சாலையை விரிவுபடுத்த

★ சபைக்குச் சொந்த இடம் கிடைக்க.

★ சபை ஊழியங்களுக்கு 10 முழு வேதாகமங்கள் கிடைக்க.

## வேத அறிவு போட்டி

1. முதல் மனிதன் பெயர் என்ன?
2. நோவாவின் வயது என்ன?
3. சிங்கக் கெபியில் போடப்பட்டது யார்?
4. இயேசுவுக்கு ஞானஸ்நானம் கொடுத்தது யார்?
5. ஏற்ற சமயத்தில் சொன்ன வார்த்தை எதற்கு சமானம்?
6. வேதத்தில் எத்தனை புத்தங்கள் உண்டு?
7. வேதக்தில் அதிக புத்தகங்களை எழுதியவர் யார்?
8. யாக்கோபின் பிள்ளைகள் எத்தனை பேர்?
9. இயேசு தெரிந்தெடுத்த சீஷர்கள் எத்தனை பேர்?
10. வேதத்தின் கடைசி புத்தகத்தின் பெயர் என்ன?

மூன்றாம் பக்கத்திலிருக்கும் 10 கேள்விகளில் முதல் ஐந்திற்கும் வசன ஆதாரத்தோடு விடை தருக. கீழ் உள்ள ஐந்திற்கும் விடை மட்டும் தருக. உங்களுடைய விடைகளை கீழ்க்காணும் முகவரிக்கு ஒரு போஸ்ட் கார்டில் எழுதி அனுப்பவும். சரியான விடை எழுதுபவர்க்கு ஆவிக்குறிய புத்தகம் ஒன்று பரிசாக அனுப்பப்படும்.

எங்களோடு தேவனை ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ள வேண்டிய முகவரி யோ 4 : 24.

## கிறிஸ்துவின் சபை

கணவாய்பட்டி ரோடு,<br>
தண்ணீர் டாங்கு சமீபம்<br>
வத்தலக்குண்டு - 624 202.

கடிதத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

**கிறிஸ்துவின் வசனம்**<br>
தபால் பெட்டி எண்: 5.<br>
**வத்தலக்குண்டு-624202.**<br>
திண்டுக்கல் அண்ணா மாவட்டம்,

**இலவசம்:** இவ்விதழ் உங்களது ஆவிக்குறிய வளர்ச்சிக்கு உதவியாக வத்தலக்குண்டு கிறிஸ்துவின் சபையாரால் அனுப்பப்படுகிறது

ஆகஸ்ட் 1992.

சாந்தி பிரிண்டர்ஸ் வத்தலக்குண்டு.